செய்தி வெளியீடு எண்: 658 நாள்:29.09.2019

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (29.09.2019) சேலம் மாவட்டம், மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேட்டூரில், முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை துவக்கி வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை</u>**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், மேட்டூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்த மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஏற்கனவே நான் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, சங்ககிரி, வீரபாண்டி ஆகிய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றையதினம் மேட்டூர், இதற்குப் பிறகு ஓமலூர் செல்லவிருக்கின்றேன்.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, நீண்டகாலமாக தீர்க்கமுடியாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். அதேபோல், என்ன காரணத்திற்காக மனு நிராகரிக்கப்பட்டது என்பதையும் அவர்களுக்கு கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும். பொதுமக்களின் மனுக்களில் பெரும்பாலானவை முதியோர் உதவித் தொகை கோரி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு அரசு உதவி செய்யவேண்டுமென்ற அடிப்படையில் சுமார் 5 லட்சம் முதியோர்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று முடிவெடுத்துள்ளோம்.

அதோடு, நீண்டகாலமாக மக்கள் வசித்து வருகின்ற வீடுகளுக்கு பட்டா வழங்க வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதிகாரிகளின் ஆய்விற்குப் பிறகு தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோல், நிலம், வீடு வாங்கியுள்ளவர்கள் பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்தால், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்விற்குப் பிறகு பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும். இன்னும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து மனு கொடுத்தால்,

அரசு அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தனிப் பட்டா இருந்தால்தான் வங்கிகளிலும் நீங்கள் கடனுதவி பெறமுடியும். எனவே, தனிப்பட்டா பெறுவதற்கு விண்ணப்பித்தால் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இறப்புச் சான்றிதழ், வாரிசுப் சான்றிதழ் என சிறு சிறு பிரச்சினைகளுக்கு பல அதிகாரிகளை சந்தித்து கோரிக்கை வைக்கும் நிலையை மாற்றி, முதலமைச்சரே நேரில் மனுக்களைப் பெறகூடிய நிலையை உருவாக்கியிருக்கிறோம். உங்கள் மனுக்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றப்பட்டு மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மக்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். ஒவ்வொரு மனுவின் மீதும் அதிகாரிகளால் தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல அலுவலர்களை நியமித்து மக்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்கள் ஏதும் விடுபடாமல் தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் கழக அரசால் அனைத்துப் பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை அவர் செல்கின்ற இடங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் பேசி வருகிறார். 2011–ஆம் ஆண்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து 2019–ஆம் ஆண்டு வரை 8 ஆண்டுகளில் மேட்டூர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மேட்டூர் நகராட்சியில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர், நடைபாதை மற்றும் குழந்தைகள் விளையாட்டு சாதனங்களுடன் அமைக்கப்பட்டுள்ள "சின்ன பார்க்" என்று அழைக்கப்படும் காமத் பூங்கா இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்றையதினம் கட்சுப்பள்ளியில் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ள அம்மா பூங்காவில், குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய வகையில் விலங்குகளின் உருவ பொம்மைகள் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று இந்தப் பூங்காவிலும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நிதியின் மூலம் அமைக்கப்படும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 40 பயனாளிகளுக்கு வீடு

கட்டுவதற்கான மானிய நிதியுதவியும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 60 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான மானிய நிதியுதவியும் என மொத்தம் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 86 இலட்சம் மானிய நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுத் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு பயிர் கடன் உதவியும், 20 பயனாளிகளுக்கு மத்திய காலக் கடனுதவியும், 96 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவியும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு கடனுதவியும் என மொத்தம் 218 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 62 இலட்சத்து 10 ஆயிரம் கடனுதவிகளும், மகளிர் திட்டம் சார்பில் 11 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடனுதவியும், 131 மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகன மானிய நிதியுதவியும் என மொத்தம் 142 மகளிருக்கு ரூபாய் 69 இலட்சத்து 25 ஆயிரம் கடனுதவி மற்றும் மானிய நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத்துறையின் சார்பில் பாரத பிரதமரின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 31 இலட்சத்து 40 ஆயிரம் மானிய நிதியுதவியும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் 4 விவசாயிகளுக்கு ரூபாய் 14 இலட்சத்து 73 ஆயிரம் வேளாண் கருவிகளுக்கான மானிய நிதியுதவியும், வேளாண்மைத்துறையின் சார்பில் நீடித்த நிலையான மானாவாரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 9 விவசாயிகளுக்கு உழவு மானியமும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 16 விவசாயிகளுக்கு இயந்திர நெல் நடவு மானியமும், 1 விவசாயிக்கு தென்னை மரம் ஏறும் கருவியும் என மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூபாய் 1 இலட்சத்து 2 ஆயிரம் மானிய நிதியுதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 2.65 கோடியில் தார்சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி மேம்பாட்டு மானிய நிதியுதவின் மூலம் ரூபாய் 6.90 கோடி மதிப்பீட்டில் 10,000 பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிகளும், ரூபாய் 2.40 கோடி மதிப்பீட்டில் 7,000 வீட்டு குடிநீர்

இணைப்புகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூபாய் 1.55 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பகிர்மான குழாய்கள் நீட்டிக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூபாய் 73 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் நகராட்சி பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ஏறக்குறைய ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை சார்பில் ரூபாய் 3.23 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அணைக்கோட்டத்தின் பராமரிப்பில் உள்ள 9 ஏரிகளை சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேட்டூர் கிழக்குக் கரை மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் செல்கின்ற நீர் வீணாகாமல் கடைமடைப் பகுதி முழுவதும் தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக நவீன முறையில் கான்கிரீட் கால்வாயாக மாற்றி கொடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதற்கட்டப் பணி நிறைவு பெற்றுள்ளது. இரண்டாம் கட்டப் பணிகள் துவங்கப்படவுள்ளன. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நீரை, முழுமையாக கிடைக்க இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. இதற்காக சுமார் ரூபாய் 250 கோடி செலவிடப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியினால் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிட செய்த சாதனையை விளக்கும் வகையில் மேட்டூர் அணைப் பூங்காவின் முகப்புப் பகுதியில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நினைவுத்தூண் கல்வெட்டு பதித்து பூங்காவின் நுழைவுவாயில் புனரமைக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளன.

அதேபோல, 83 ஆண்டு காலமாக தூர்வாரப்படாமல் இருந்த மேட்டூர் அணையை தூர்வாரி சரித்திரம் படைத்த அரசு எங்களுடைய அரசு. முதலமைச்சர் என்ற முறையில் நானே நேரில் வந்து இத்திட்டத்தை தொடங்கி வைத்தேன். இதன் மூலம் கிடைக்கும்

வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து தங்கள் விளைநிலங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பருவ காலங்களில் பொழிகின்ற மழைநீரை சேமிக்கும் வகையில், தொலைநோக்குச் சிந்தனையோடு, ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகளை தூர்வாரும் குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது முழுக்க, முழுக்க விவசாயிகளைக் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை குறை கூறும் எதிர்க்கட்சியினர், அவர்கள் ஆட்சி காலத்தில் ஒரு ஏரியைக்கூட தூர்வாரவில்லை. பொதுப்பணித்துறையின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 14,000 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 26,000 ஏரிகள், ஆக மொத்தம் தமிழ்நாட்டில் இன்றைக்கு 40,000 ஏரிகள், குளங்கள் உள்ளன. இவைகளை படிப்படியாக தூர்வாரும் வகையில் குடிமராமத்து திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி, குறிப்பிட்ட ஏரிகளை எடுத்துக் கொண்டு குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக ரூபாய் 100 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூபாய் 328 கோடியும் ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு, 1,829 பொதுப்பணித் துறை ஏரிகளை தூர்வாருவதற்கு ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஏரிகள், குளங்கள், குட்டைகளை தூர்வாருவதற்கு ரூபாய் 1,250 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், சிறப்பான இந்தத் திட்டத்தை எதிர்க்கட்சியினர் குறை கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் மேட்டூர் அணையிலிருந்து உபரி நீர் கடலில் வீணாக கலப்பதைத் தடுக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளார். திமுக ஆட்சியில் மேட்டூர் முதல் கொள்ளிடம் வரை எத்தனை தடுப்பணைகள் கட்டினார்கள்? தமிழகத்திலே அதிக ஆண்டுகள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் திரு. துரைமுருகன் அவர்கள் தான். ஆனால், ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை. எதுவுமே செய்யாத ஸ்டாலின் எங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மேட்டூரிலிருந்து உபரி நீர் வீணாக கடலில் சென்று கலப்பதை தடுப்பதற்காக கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக ஆதனூர் குமாரமங்கலம் என்ற இடத்திலே மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக அம்மா அறிவித்தார்கள். அதனை நாங்கள் இன்று செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வேறு நலத் திட்டங்களை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. மேட்டூர் தொகுதியில் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியிருக்கின்றோம். மாணவ, மாணவியருக்கு புதிய, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, தேவையான அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் அம்மாவின் அரசு உருவாக்கித் தந்துள்ள காரணத்தினால் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 49 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது.

இன்றைக்கு தமிழகம் மின்மிகை மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதனால் தான் புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. கடந்த திமுக ஆட்சியில் கடுமையான மின்வெட்டு இருந்ததை நீக்கி, மூன்றே ஆண்டு காலத்தில் தடையில்லா மின்சாரத்தை வழங்கியவர் மாண்புமிகு அம்மா. நான் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தபொழுது, அங்குள்ள தொழிலதிபர்கள்—இன்றைக்கு தமிழ்நாடு வளம் கொழிக்கும் மாநிலமாகவும், தொழில் தொடங்க உகந்த மாநிலமாகவும் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்கள். மேலும், தமிழகத்தில் தொழில் தொடங்க 41 தொழில் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள். இதனை பொறுத்துக்கொள்ள முடியாத எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் வெள்ளை அறிக்கை கேட்கின்றார். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு தொழிற்சாலைகளைத் தொடங்கி வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் உயர வேண்டும். விவசாயிகளின் வாழ்க்கை செழிக்க வேண்டும்.

அதற்காகத் தான் நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தி விவசாயிகளுக்கு போதிய நீர் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வேளாண்மைத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2006–ஆம் ஆண்டு முதல் 2011–ஆம் ஆண்டு வரை திமுக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், 2011–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்த்து, எந்த ஆட்சி மக்களுக்கான ஆட்சி என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டும்.

சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 7,751 பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 79 கோடி மதிப்பிலான பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 14,797 பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 40 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழகம் தொடர்ந்து முதன்மை வகித்து வருவதற்குக் காரணம் அம்மாவினுடைய அரசு தான். வெளி நாடு சென்ற பொழுது, டெங்கு மற்றும் மலேரியா கொசுக்களை ஒழிப்பதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கின்றோம். மேட்டூர் தொகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்திருக்கின்றோம். புதிய மருத்துவர்களை நியமனம் செய்திருக்கின்றோம். நடமாடும் மருத்துவமனையை உருவாக்கியிருக்கின்றோம். மருத்துவத் துறையில் உள்ள காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அதிகளவில் கால்நடை மருத்துவமனைகளை தொடங்கிய அரசு அம்மாவின் அரசு.

மேட்டூரில் 16 கண் பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. பவானியிலிருந்து மேட்டூர் வரை, மேட்டூரிலிருந்து தொப்பூர் வரையிலான சாலையினை விரிவாக்கம் செய்யவதற்கான நிலஎடுப்புப் பணி முடிந்தவுடன் விரைவில் சாலை விரிவாக்கம் செய்யப்படும்.

கூட்டுறவுத்துறை சார்பில் 51,610 விவசாய பெருமக்களுக்கு சுமார் ரூபாய் 270 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளன. 2,585 விவசாய பெருமக்களுக்கு சுமார் ரூபாய் 16 கோடி மத்திய கால கடன் வழங்கப்பட்டுள்ளன. 4,65,843 விவசாய

பெருமக்களுக்கு ரூபாய் 1,517 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளன. 588 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2.51 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுவைச்சார்ந்த 1,305 மகளிருக்கு ரூபாய் 33.51 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. 10,235 நபர்களுக்கு சுமார் ரூபாய் 33 கோடி இதர கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம், 8 ஆண்டுகளில் மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் மட்டும் கூட்டுறவுத்துறையின் மூலம் மொத்தம் 5,32,166 நபர்களுக்கு ரூபாய் 1,871.99 கோடி பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பல்வேறு திட்டங்கள் மேட்டூர் தொகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த அரசு மக்களின் அரசு, மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு. இந்த அரசுக்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**